*The World of Knowledge*

**SHREE GURUKULAM HIGHER SECONDARY SCHOOL**

Moolavaikkal, Karattadipalayam Post, Gobichettipalayam, Erode District - 638 453, Tamilnadu.

Mobile: 93845 66268, 90039 76268

Website: www.shreegurukulam.org Email Id: shreegurukulam@gmail.com

# SGHSS Newsletter

PRIME MOTTO

QUALITY EDUCATION

DISCIPLINE




# SEPTEMBER NEWSLETTER 2023

Volume: 1 Issue: 3

# TEACHERS DAY

**"Teachers can change lives with just the right mix of chalk and challenges".**

"Teachers are called many things : educators, mentors, instructors, and sometimes the accidental mom. No matter what they called, we can all agree that they truly have a gift of influencing lives both inside and outside of their classroom".

Teacher's Day is celebrated every year to show that the devotion, hard work and eternal positivity of a teacher. The day is also celebrated to pay tribute to Dr. Sarvapalli Radhakrishnan, former president of the country and a visionary educator. The students of Shree Gurukulam Higher Secondary School enthusiastically participated in the celebrations of teacher's day with a string of surprises they planned for their teachers. The speech was given by the teachers Ms. H. Rukshana Begam and Mrs. R. Padmavathi and the students N.P.Shivaprakash(XII-B), D.S.Vedha Rajeshwari(XI-B), M.Sudharshan(XI-C), V. Priyavadhana(X-A), wherein they mentioned that the teachers are the awe-inspiring and the rock stars of education. And also the students of VIII-A participated in group songs. Each music had a message that the duties undertaken by the teachers in upbringing of children is immense, and thus being recognized with, teachers day is a step towards recognizing the profession and the role they play in society.

**- Ms. K. Vanitha, PGT in English**















# கோகுலாஷ்டமி விழா

நமது பள்ளியில் செப்டம்பர் 5.9.2023 அன்று காலை 10.00 மணி அளவில் கோகுலாஷ்டமி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. உலகைக் காக்கும் திருமால் ஒன்பதாவது அவதாரத்தில் கண்ணனாகப் பிறந்து தன்னுடைய கீதை உபதேசம் மூலம் மனிதர்களுடைய வாழ்வை மேம்படுத்தினார். கோகுலக்கண்ணனின் பெருமைகளைப் பற்றி 12-ஆம் வகுப்பு மாணவி **T. பிரியவர்ஷினி** கவிதையாக வாசித்தார். இடைநிலைப் பிரிவின் ஆசிரியை **E. தரணி** அவர்கள் கிருஷ்ணவதாரத்தின் சிறப்புகள் குறித்து உரையாற்றினார்.

கண்ணனாக ராதையாக வேடமிட்ட குழந்தைகள் கண்ணனின் பாடல்களுக்கு காற்றில் பூக்கள் அசைந்ததைப் போல அழகாக ஆடினர். பள்ளியில் தாளாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் முதல்வர் ஆகியோர் பூக்களைத் தூவி கண்ணனை வழிபாடு செய்தனர்.

பள்ளியின் மதிப்பிற்குரிய முதல்வர் திரு **P. சந்திரசேகரன்** அவர்கள் கோகுலாஷ்டமி விழாவின் முக்கியத்துவம் குறித்து தொடக்க உரையாற்றினார். **"மாணவர்கள் ஒழுக்கப்பண்புகளுடன் வாழ்வதற்கு இறைவனின் திருவருளைப் பெற வேண்டும் என்றும் இறைவனை முறையாக வணங்குவதன் மூலம் வாழ்வில் நல்ல முன்னேற்றங்களைப் பெறலாம்"** என்று எடுத்துரைத்தார்.

நமது பள்ளியின் மதிப்பிற்குரிய பொருளாளர் திரு **K. புகழேந்தி** அவர்கள் கோகுலாஷ்டமி விழாவில் பங்கேற்ற மாணவச் சிறார்களைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினார். நமது பள்ளியின் மதிப்பிற்குரிய தாளாளர் **Dr. S.M. ஜெகதீசன்** அவர்கள் கோகுலாஷ்டமி விழாவின் சிறப்புரை ஆற்றினார். **"ஒரு மனிதன் இறைவனை உணரும் பொழுது சிறந்த மனிதனாக உருவாகின்றான் என்றும் இச்சமுதாயத்தில் உள்ள அநீதிகளை அழித்து நீதியை நிலைநாட்டுவதாக ஒரு மனிதனுடைய பிறப்பு அமைய வேண்டும் என்பதைக் கிருஷ்ணவதாரம் நமக்கு உணர்த்துகிறது"** என்று கோகுலாஷ்டமி தினத்தின் பெருமைகளைப் போற்றும் விதமாக எடுத்துரைத்தார். இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த மாணவ மாணவிகளைப் பாராட்டி மகிழ்ந்தார். விழாவின் நிறைவில் அனைவருக்கும் அவல் பிரசாதம் வழங்கப்பட்டது.

**திருமதி. S. தமிழ்ச்செல்வி,** PGT in Tamil .









# உருளைச் சுருக்குப் போட்டிகள்

மாவட்ட அளவிலான உருளைச் சுருக்கு போட்டிகள் - 2023, கடந்த செப்டம்பர் 10-ஆம் தேதியன்று புஞ்சை புளியம்பட்டியில் நடைபெற்றது. ஈரோடு மாவட்ட சுருக்கு அமைப்பு, சுருக்கு பயிற்சியாளர்களின் அமைப்பு மற்றும் ராயல் ஸ்கேட்டிங் அகாடமி இணைந்து இப்போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தனர். இதில் பல்வேறு பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டியில் நம் மாணவர்கள் கலந்து கொண்டு பரிசுகளையும் பதக்கங்களையும் பெற்றனர். நம் மாணவர்கள் சிறப்பாக பங்குபெற்று மாவட்ட அளவிலான பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வென்று நம் பள்ளிக்கு பெருமை சேர்த்தனர். வெற்றி பெற்ற மாணவர்களை நமது பள்ளியின் தாளாளர் மற்றும் முதல்வர் அவர்கள் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

**First Place**

M.G.Kanishkar[6-A]
G.Praneesh[7-C]
Pranitha[6-A]
Gownisha[7-B]
Vaineesh[5-B]
Hariharan[7-A]

**Second Place**

V.Benojones[9-C]
Prithvin[8-C]
Anbiniya[6-A]
Hanusurya[7-B]

**Third Place**

S.M.Sanjay[7-B]
M.Lavankumar[6-A]
S.Abishek[6-A]
R.Mugunthan[7-C]
E.Sathyaprakash[7-B]
Aswathaman.P[7-C]
Shamiksha[6-C]



- **Mrs. R. Banupriya,** SG Teacher in CS **& Mrs. M. Vidhyasree,** BT in English



KANISHKAR M G 6-A I PLACE



PRANEESH G 7-C I PLACE



PRANITHA 6-A I PLACE



GOWNISHA 7-B I PLACE



VAINEESH 5-B I PLACE



HARIHARAN 7-A I PLACE



BENO JONES 9-C II PLACE



PRITHVIN S A 8-C II PLACE



ANBINIYA 6-A II PLACE



HANU SURYA 7-B II PLACE



SANJAY S M 7-B III PLACE



LAVAN KUMAR 6-A III PLACE

# உருளைச் சுருக்குப் போட்டிகள்





**ABISHEK S 8-B III PLACE** **MUGUNTHAN R 7-C III PLACE** **SATHYA PRAKASH E 7-B III PLACE**





**ASVATHAMAN 7-C III PLACE** **SHAMIKSHA 6-C III PLACE** **JEEVA 7-A III PLACE**





**LAKSITH 7-C III PLACE** **KAVIYAN 6-A III PLACE**

# வைட்டமின் சொட்டு மருந்து வழங்கும் நிகழ்வு

தமிழ்நாடு அரசு சுகாதாரத் துறையினால் 5-வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு வைட்டமின் ஏ பீடியாட்ரிக் ஓரல் சொல்யூஷன் ஐபி சொட்டு மருந்த 25.09.2023 திங்கட்கிழமை அன்று நம் பள்ளி வளாகத்தில் அரசு செவிலியர்கள் **திருமதி கலையரசி மற்றும் திருமதி சத்தியபபிரியா** அவர்களால் நமது குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது.

**- Mrs. D. Sylviya,** SGT in English







# கையெழுத்துப் போட்டி

தமிழ்மொழியை ஊக்கப்படுத்தும் விதமாக மாண்புமிகு தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் பள்ளி மாணவர்களுக்கு தமிழ் கையெழுத்துப் போட்டியை பள்ளி அளவில் அறிவித்து இருந்தார்கள். 6 முதல் 9-ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களில் ஒருவரும், 10 முதல் 12-ஆம் வகுப்பு மாணவர்களில் ஒருவரும் பள்ளிக்கு இருவர் தேர்வு செய்யப்பட்டு அடுத்த கட்ட தேர்விற்கு அனுப்பப்பட்டார்கள்.

அழகாக எழுதிய மாணவர்களுக்கு வகுப்பு வாரியாக முதல் மூன்று பரிசுகளைக் கொடுத்து உற்சாகப்படுத்தப்பட்டார்கள்.

**- Mrs. M.S. Vasuki,** SGT in Tamil

**மாணவர்களின் பெயர்கள்:**

V.KAVINAYA(6-A) I
S.SAMIKSHA(6-A) II
S.JANSI(6-A) III
D.VISHALI(7-C) I
A.S.AKSHAYA(7-A) II
V.PRANITHA(7-B) III
S.DHANYASRI(8-A) I
S.GOWSIKA(8-A) II
C.SHASWATIPRIYA(8-A) III
T.K.KANIMOZHI(9-A) I
C.M.ELAKKIYA(9-A) II
G.KANISHKA(9-A) III



V.KAVINAYA(6-A) I



S.SAMIKSHA(6-A) II



S.JANSI(6-A) III



D.VISHALI(7-C) I



A.S.AKSHAYA(7-A) II



V.PRANITHA(7-B) III



S.DHANYASRI(8-A) I



S.GOWSIKA(8-A) II



C.SHASWATIPRIYA(8-A) III



T.K.KANIMOZHI(9-A) I



C.M.ELAKKIYA(9-A) II



G.KANISHKA(9-A) III

# தினத்தந்தி நாளிதழ் போட்டிகள்

19.08.2023 (சனிக்கிழமை) அன்று தினத்தந்தி நாளிதழுக்கான பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. அதில் மாணவர்கள் கலந்துகொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினார்கள். மாணவர்களின் படைப்புகள் 04.09.2023 அன்று தினத்தந்தி நாளிதழில் ஸ்ரீ குருகுலம் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் ஸ்பெஷலில் வெளியானது பெருமைக்குரியது.



ஈரோடு 4-9-2023

தினத்தந்தி

தினத்தந்தி மாணவர் ஸ்பெஷல்

மாணவ பிரம்மாக்கள்

கு.அபிநவ், 2-ம் வகுப்பு

த.யபினேஷ், 1-ம் வகுப்பு

த.சோ.சரனீஷ், 5-ம் வகுப்பு

கே.பி.ஸ்ரீநிதி, 6-ம் வகுப்பு

ல.த.இனிதா, 9-ம் வகுப்பு

எம்.லக்ஷனா, 8-ம் வகுப்பு

கோ.கனிஷ்கா, 9-ம் வகுப்பு

என்.யுகபாரதி, 9-ம் வகுப்பு

## கோட்டை வீரன்

(சிறுகதை)

ஒரு நாட்டின் அரசன் அந்த நாட்டு மக்களுக்கு ஒரு போட்டி அறிவித்தான். அதாவது பலம் வாய்ந்த கோட்டை கதவை 2 கைகளாலும் தூக்கி காட்டவேண்டும். அவ்வாறு தூக்கினால், ஏராளமான பொன்னும், பொருளும் வழங்கப்படும். தூக்க முடியாமல் தோற்றுவிட்டால் 2 கைகளும் வெட்டப்படும் என்பதுதான் அது.

போட்டி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட நாள் வரை பொதுமக்கள் யாரும் போட்டியில் கலந்துகொள்ள முன்வரவில்லை. அரசரும், அமைச்சர்களும் கோட்டை மேடையில் உட்கார்ந்து அன்று சூரியன் மறையும் வரை காத்திருந்தார்கள். என்ன கொடுமை ஒருவர் கூட நம் நாட்டில் துணிச்சலாக போட்டியில் கலந்துகொள்ளவில்லையே என்று எரிச்சலடைந்த அரசன் எழுந்து அரண்மனைக்கு செல்ல நினைத்தான்.

அப்போது ஒரு இளைஞன் வந்தான். அரசே நான் கோட்டை கதவை தூக்கி காட்டுகிறேன் என்றான். அதை கேட்ட அரசனுக்கும், பொதுமக்களுக்கும் அதிர்ச்சி. கதவை தூக்க முடியவில்லை என்றால் உன் கைகள் வெட்டப்படும் தெரியுமா? என்றான். தெரியும் என்று கூறிய அந்த இளைஞன் வேகமாக சென்று கோட்டை கதவை தலைக்கு மேலே திடீரென தூக்கிவிட்டான்.

பொதுமக்கள் எல்லாரும் அசந்து கை தட்டினார்கள். கதவை தூக்கிய இளைஞனுக்கு அதிர்ச்சி. கதவு கனமே இல்லை. காகிதத்தால் செய்யப்பட்ட பொய் கதவு. அப்போது அரசன் உரக்க சொன்னான். நாட்டில் துணிச்சல் யாருக்கு அதிகமாக உள்ளது என்று ஒரு போட்டி வைக்க நினைத்தேன். அதனால் கோட்டை கதவைப்போலவே காகிதத்தில் கதவு செய்யச்சொல்லி இருந்தேன். இந்த இளைஞன் துணிச்சலோடு தூக்கி விட்டான். இவனுக்கு பொன்னும், பொருளுமட்டுமல்ல அவனையே கோட்டை வீரனாக்குகிறேன் என்றான்.

– ர.புவிஷா, 7–ம் வகுப்பு

## கவிதைகள்

### பறவை

பறவையைப்போல் பற
காற்றைப்போல் வீசு
குதிரையைப்போல் ஓடு
உன் பாதையில் நீ ஓடு...
நம்பிக்கையுடன் ஓடு...
உன் உயிரை விடுவதால்
வெற்றியாளனாய் ஆகமாட்டாய்
உன் ஆசையை விடுவதால்
தோல்வியாளனாய்
ஆகமாட்டாய்
பலமுறை விழுந்தாலும்
ஒருமுறையாவது எழுந்து நில்
நீ, தோல்வை நினைத்து
நித்தம் கண்ணீர் சிந்தாதே
உங்களை கடவுளாக பார்க்க
சமூகம் தயாராக உள்ளது
இன்னொரு அனிதாவையும்
ஜெகதீஸ்வரனையும்
இழக்க யாரும்
தயாராக இல்லை.

நு.செ.காயத்திரி ஸ்ரீ, 9-ம் வகுப்பு

### தமிழ்த்தாய்

நினைவு தெரிந்த நாளிலிருந்து
என் நாவில் உதிக்காத நாளுண்டோ
அறிவை ஊட்டி வளர்த்து
என்னை அகன்ற உலகத்தில்
வாழச்செய்தாய்
இனிய தேனின் சுவைபோல்
என்றும் இனிக்கும்
உன் இன்சொற்கள்
கடல்போன்ற உன் பெருமையை
நான் கரம் கூப்பி வணங்குவேன்
வெப்பம் தணிக்கும்
தென்றல்போல்
தென்னாட்டை சிறப்படைய
செய்கிறாய்
பல வண்ணங்கள்
நிறைந்த கோலமாய்
பல மொழிகள் கலந்தாலும்
நீ சிறப்பே
ஒளிமிகுந்த சூரியனின்
கதிர்களைப்போல்
ஒளிர்கிறது உன் புகழ்
உலகமெங்கும்
தவம் செய்தாலும் கிடைக்காத
இனிமையே
என் தாயே...தமிழ்த்தாயே....

கோ.ப.ஜெய் ஆகாஷ், 9-ம் வகுப்பு

## விடுகதைகள்

1. வாங்கும்போது நான் கருப்பு, எரிந்த பின்னர் வெள்ளை — கரிக்கட்டை.
2. கை இல்லாதவனுக்கு 5 விரல்கள் — கையுறை
3. இறக்கை இல்லாதவன் உயரே பறக்கிறான் — புகை
4. எல்லா இடத்தில் இருந்தாலும் என்னை பிடிக்க முடியாது நான் யார்? – காற்று
5. என்னை சாப்பிட வாங்குவார்கள், ஆனால் சாப்பிட முடியாது – தட்டு

எஸ்.நிவிஸ், 2-ம் வகுப்பு

1. காலால் தண்ணீர் குடித்து தலையில் முட்டையிடுவான் — தென்னை மரம்.
2. உடம்பு இல்லாதவனுக்கு தலையுண்டு, பூவுண்டு — நாணயம்.
3. தம்பிக்கு எட்டும் அண்ணனுக்கு எட்டாது — உதடு
4. முற்றத்தில் நடப்பாள் மூலையில் கிடப்பாள் — துடைப்பம்
5. சின்னஞ்சிறு வீட்டில் சிப்பாய்கள் பலர் — தீக்குச்சி
6. பறிக்க பறிக்க பெரிதாகும் — குழி
7. நூறு கிளிக்கு ஒரே வாய் — வாழைப்பூ
8. திரியில்லாத விளக்கு உலகெல்லாம் ஒளி தருது– சூரியன்
9. அமைதியானவன், அடிக்காமலேயே அழுவான் — ஐஸ்கட்டி
10. தாய் இனிப்பாள், மகள் புளிப்பாள், பேத்தி மணப்பாள்– பால், மோர், நெய்.

பி.அஸ்வத்தாமன், 7-ம் வகுப்பு

### நீளமான கடற்கரை

உலகில் மிக நீளமான கடற்கரை அமெரிக்காவின் தெற்கு புளோரிடாவில் உள்ள மியாமி கடற்கரைதான். 2–வது மிகப்பெரிய கடற்கரை சென்னை மெரினா கடற்கரை.

ச.பாரதி, 7-ம் வகுப்பு.

### ஆசிரியர்

உன் குருவாய் இருப்பவர்
பெற்றோரின்
மறு உருவமாய் இருப்பார்.
பலநூல் கற்ற அறிவாய்
அறிவராய் இருப்பார்.
நாம் தவறு செய்தால்
திருத்தும் நண்பராய் இருப்பார்
நம் உணர்வுகளை புரிந்த
உறவாய் இருப்பார்.
நல்ல வழிகாட்டும்
கலங்கரை விளக்கம் அவர்
நம்மை உயர்த்தும் வெற்றிப்படி அவர்
பள்ளி முதல் கல்லூரி வரை
அழைத்து செல்லும் வழித்துணை
ஆசிரியர்கள்.

ம.லக்ஷனா, 8-ம் வகுப்பு.

### நீங்களும் ஓவியர் ஆகலாம்

இந்த வாரம் டாக்டர் ராதாகிருஷ்ணன் ஓவியம் வரைவது பற்றி பார்க்கலாம்.

மாணவ பிரம்மாக்கள்

எஸ்.ஹரினி ஸ்ரீ, 8-ம் வகுப்பு

எஸ்.ஸ்ரீநிதி, 9-ம் வகுப்பு

ச.மோகித், 3-ம் வகுப்பு

மு.தாரிகா, 9-ம் வகுப்பு

எல்.அனீஷ், 5-ம் வகுப்பு

கீ.க.சஹானா 4-ம் வகுப்பு

மோ.மவுநிதாஸ்ரீ, 4-ம் வகுப்பு

சொ.ஜோ.கார்னிகவர்த்தினி 4-ம் வகுப்பு

தொகுப்பு: ஸ்ரீ குருகுலம் மேல்நிலைப்பள்ளி, கோபி.

Manavar Spl Pag.indd 10 9/3/2023 5:24:58 PM

# GANESH CHATURTHI CELEBRATIONS

The lord Ganesha is the God of new beginings and the remover of obstacles as well as the god of wisdom and intelligence. Ganapathi Chaturthi was celebrated on 15th Sep. 2023 in Kinder Garten Department. Mrs.D.Sylvia, Miss.A.Indhumathi, Mrs.V.Rajeshwari, Miss.K.Kanagalakshmi, Mrs. M. Seethalakshmi, and Mrs.M.Anitha arranged the function. Our Chairman Dr. S.M. Jagatheesan Sir and Principal Mr. Chandrasekaran performed Pooja with us.

Next, KG teachers and children sang "Aindhu Karathanai Aanai Muhathanai...." Ganesha slogam. Our Chairman Sir enjoyed giving sweet to the children with his hands as a way of showing his love and care. Finally, our Principal Sir applied sandal and kumkum on students forehead and concluded the Pooja. Thanks for the Parent & Students for bringing Ganesha statue and charts.

**- Mrs. D. SYLVIA, SGT in English.**














# விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டம்

"அண்டம் முழுதும் ஒன்றினுள் அடக்கம்
அதுவே ஆனைமுகம் எனும் ஓம்கார விளக்கம்"

இவ்வுலகோர் உய்ய விநாயகர் பிறந்தநாளான ஆவணி மாத சதுர்த்தி நாளில் விநாயகர் சதுர்த்தியானது கொண்டாடப்படுகிறது. இவ்விழாவானது நமது ஸ்ரீ குருகுலம் மேல்நிலைப் பள்ளியில் செப்டம்பர் 16-ஆம் தேதியன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது. நமது பள்ளியின் தாளாளர் முனைவர் S.M. ஜெகதீசன் அவர்கள், பொருளாளர் திரு. K. புகழேந்தி அவர்கள், முதல்வர் திரு. P. சந்திரசேகரன் அவர்கள் முன்னிலையில் இவ்விழாவின் முதல் நிகழ்வாக காலை 9.30 மணியளவில் விநாயகர் வழிபாடும் அதனைத் தொடர்ந்து நமது பள்ளியின் 9-ஆம் வகுப்பு மாணவிகள் **G.கனிஷ்கா, S. லிவிதா, M. தாரிகா மற்றும் R. ஜனனிஸ்ரீ** ஆகியோர் விநாயகர் துதி பாடினர்.

இதனைத் தொடர்ந்து நமது பள்ளி மாணவிகள் விநாயகர் சதுர்த்தி பற்றி D.S. **காயத்ரிஸ்ரீ IX-B** தமிழிலும், C.G. **பாரதிஸ்ரீ** IX-A ஆங்கிலத்திலும் சிறப்பாக எடுத்துரைத்தனர். அடுத்ததாக நமது பள்ளியின் மாணவிகள் V. **ரித்திகா**-IIB **மற்றும்** Y.A. **ஹஸ்விதா** II-B ஆகியோர் தங்களது மழலை மொழியில் விநாயகர் பாடலை அழகாகப் பாடினர் மற்றும் அதே வகுப்பினைச் சார்ந்த மாணவ மாணவிகள் அனைவரும் விநாயகர் பாடலை குழுவாகப் பாடினார்கள். தாளாளர் அவர்கள் சிறப்புரையாற்றி இவ்விழாவை நிறைவு செய்தார்.

**-Mr. P. Vijayakumar,** BT in Tamil.











# விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டம்













# ஓசோன் தினம்

உலக ஓசொன் தினம் செப்டம்பர் 16-ஆம் தேதி அன்று நம் பள்ளியில் சிறப்பாக கொண்டாடப்பட்ட, நமது பள்ளியின் பசுமைப்படை (**ECO CLUB**) மாணவர்கள் தங்களது பொறுப்பாசிரியர்களுடன் நம் பள்ளிக்கு மரக்கன்றுகளை வழங்கி சிறப்பித்தனர். அடுத்ததாக நமது பள்ளி ஆசிரியர்கள் - தாளாளர், பொருளாளர் மற்றும் முதல்வருடன் குழப் புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். இவ்விழாவின் நிறைவாக மாணவாக்ளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.












# ஆசிரியர் புத்தாக்கப் பயிற்சி

## தன்னை உணர தரணி செய்ய

நமது பள்ளியில் 30.09.2023 சனிக்கிழமை அன்று ஆசிரியர் புத்தாக்கப் பயிற்சி நிகழ்வு தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. முதுகலைத் தமிழாசிரியர் திருமதி **S.** தமிழ்ச்செல்வி அவர்கள் இந்நிகழ்வின் வரவேற்புரையை வழங்கினார். நமது பள்ளியின் மதிப்பிற்குரிய செயலாளர் திரு **K.** சுப்பிரமணியம் அவர்கள் மற்றும் பொருளாளர் திரு **K.** புகழேந்தி அவர்கள் ஆசிரியர் புத்தாக்கப் பயிற்சி நிகழ்வினைத் தலைமையேற்றுத் தொடங்கி வைத்தார்கள்.

நமது பள்ளி முதல்வர் மரியாதைக்குரிய திரு **P.** சந்திரசேகரன் அவர்கள் ஆசிரியர் புத்தாக்கப் பயிற்சி நிகழ்வின் தலைமை உரை ஆற்றினார். இவர் தமது தலைமை உரையில் **"**ஆசிரியர்களுக்கு இப்புத்தாக்கப் பயிற்சி மிகுந்த பயனுடையதாகவும், தம் ஆற்றலை அறிந்து தம்மை மேம்படுத்திக் கொள்வதற்கு நல்லதொரு வாய்ப்பாகவும் அமைந்துள்ளது**"** என்று கூறினார்.

நமது பள்ளியின் மதிப்பிற்குரிய தாளாளர் முனைவர் திரு **S.M.** ஜெகதீசன் அவர்கள் இப்புத்தாக்கப் பயிற்சி நிகழ்வின் சிறப்புரையை ஆற்றினார். தமது உரையில் "ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் புதிய விஷயங்களை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்றும், மாணவர்களுக்கு நல்ல பண்புகளைக் கற்றுக் கொடுத்து சமுதாயத்தில் தலைசிறந்த மனிதனாக உருவாக்குவது ஆசிரியர்களின் தலையாயக் கடமையாகும்" என்று எடுத்துரைத்தார்.

ஆசிரியர் புத்தாக்கப் பயிற்சி நிகழ்வின் சிறப்பு விருந்தினர் கெட்டிச்செவியூர் அரசு மேல்நிலைப்பள்ளியின் வேதியியல் துறை முதுகலை ஆசிரியர் மதிப்பிற்குரிய திரு **G.N.** சந்திரசேகரன் அவர்கள் **"**தன்னை உணர தரணி செய்ய**"** என்னும் தலைப்பில் சிந்தனை உரை ஆற்றினார். அவர் தமது உரையில் "ஓர் ஆசிரியர் ஒரு மரத்தின் வேர் போன்று உறுதியும் ஆழமும் மிக்கவராக இருக்க வேண்டும் என்றும், மாணவர்களின் அஞ்ஞானத்தை அகற்றி ஞானச்சுடரை ஏற்றுபவர்களாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும் என்றும், மாணவர்களிடையே நேர்மறையான எண்ணங்களை வளர்த்து, உயர்ந்த குறிக்கோளுடனும், மிகுந்த பொறுப்புணர்ச்சியுடனும் ஆசிரியப் பணியில் ஆசிரியர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்" என்று தமது சிந்தனை உரைக் கருத்துக்களை வழங்கினார்.

உயர்நிலைப் பிரிவின் ஆங்கில ஆசிரியை திருமதி **M.** வித்யா ஸ்ரீ அவர்கள் இந்நிகழ்வின் நன்றியுரையை வழங்கினார். ஆசிரியர் புத்தாக்கப் பயிற்சி நிகழ்வு நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவு பெற்றது.

**Mrs. S.S. Tamilselvi,** PGT in Tamil.










# நாட்டு நலப்பணித்திட்டம்

நமது பள்ளி சார்பாக 2023-24-ம் கல்வியாண்டுக்கான நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் கோபிபாளையம் தூய திரேசாள் முதனிலைப்பள்ளியில் 30.09.2023 அன்று காலை 10-மணியளவில் துவங்கியது. இம்முகாமில் நமது பள்ளியின் திட்ட அலுவலர் திரு. K.C. கிருஷ்ணசாமி மற்றும் உதவித் திட்ட அலுவலர் திரு. E. சத்திவேல் ஆகியோருடன் நமது பள்ளியின் 25 மாணவர்கள் கலந்துகொண்டனர். இம்முகாமின் துவக்க நாளன்று திரு. K.C. கிருஷ்ணசாமி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். நம் பள்ளியின் தாளாளர் முனைவர் S.M. ஜெகதீசன் அவர்கள் தலைமையில் நமது பள்ளியின் செயலாளர் திரு. K. சுப்பிரமணியம் அவர்களின் முன்னிலையில் நமது பள்ளியின் பொருளாளர் திரு. K. புகழேந்தி அவர்கள வாழ்த்துரை வழங்கினார். இதனைத் தொடர்ந்து நமது பள்ளியின் முதல்வர் திரு. P. சந்திரசேகரன் அவர்கள் மற்றும் தூய திரேசாள் முதனிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு. A. தாமசு அவர்கள் முறையே வாழ்த்துரை மற்றும் சிறப்புரை வழங்கினர். இவ்விழாவின் முடிவில் உதவித்திட்ட அலுவலர் திரு. E. சத்திவேல் அவர்கள் நன்றியுரை வழங்கினார். இதனை அடுத்து பள்ளி வளாகத்தில் களப்பணி நடைபெற்றது.

**- Mrs. M. Vidhyasree,** BT in English









# போட்டித் தேர்வுகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி

நமது ஸ்ரீ குருகுலம் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் TNPSC, UPSC, JEE, NEET போன்ற தேர்வுகளுக்கான அடிப்படைப் பயிற்சிகளைப் பள்ளியில் பயிலும்போதே பெருவதன் மூலம் இத்தேர்வுகளை அச்சமின்றியும், தெளிவுடனும் எதிர்கொள்ளவேண்டும் என்ற நோக்கில் நமது பள்ளியின் தாளாளர் Dr. S.M. ஜெகதீசன் அவர்களின் அறிவுறுத்தலின் படி பள்ளியின் முதல்வர் திரு. P. சந்திரசேகரன் அவர்கள் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளை அறிமுகப் படுத்தினார்.

LAKSH STUDY CIRCLE அமைப்புப் பயிற்றுணர்கள் மூலம் போட்டித் தேர்வுகளின் தேவைகளையும் அவற்றின் முக்கியத் துவத்தையும் மாணவர்கள் தங்களின் வெற்றிப் பாதையை எவ்வாறு அமைக்க வேண்டும் என்பதைப் பற்றியும் விளிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**- Mr. S. Periyasamy,** PGT in Tamil.










*The World of Knowledge*

வாழ்க வளமுடன்

# ஸ்ரீ குருகுலம் மேல்நிலைப்பள்ளி

**DAY CUM RESIDENTIAL SCHOOL**

மூலவாய்க்கால், கரட்டிபாளையம் (Po.), **கோபிசெட்டிபாளையம்,** ஈரோடு (Dt.) - 638 453.



2023 – 2024 ஆம் கல்வியாண்டிற்கான

## விஜயதசமி சேர்க்கை

நடைபெறுகிறது.

குறைவான கட்டணம்... நிறைவான கல்வி...

**Prime Motto**

Quality Education | Discipline

**24.10.2023 செவ்வாய்க்கிழமை**

அன்று குழந்தைகளுக்கு

**அக்ஷராப்பியாசம்** செய்வித்து

**Pre KG, LKG, UKG**

வகுப்புகளுக்கான சேர்க்கை தொடங்கப்பட உள்ளது.





KG முதல் 8 ஆம் வகுப்பு வரை LEAD பாடத்திட்டத்தின் மூலம் கல்வி கற்பிக்கப்படுகிறது. இந்த பாடத்திட்டம் மாணவர்களின்

- சிந்தனைத் திறன்
- தர்க்க சிந்தனைத் திறன்
- உயர் சிந்தனைத் திறன்
- படைப்பாற்றல் திறன்
- பேச்சுத் திறன்
- எழுதும் திறன்

ஆகியவற்றை வளர்க்கிறது.

Powered by LEAD SCHOOL





**பள்ளியின் சிறப்பம்சங்கள்**

- இயற்கையான சுற்றுச்சூழலோடு அமைந்த பள்ளி வளாகம்.
- பள்ளி இயக்குநர்களின் நேரடிப்பார்வையில் திறமையும், அனுபவமும் மிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படும் பள்ளி.
- ஒழுக்கம் சார்ந்த கல்வி முறையே பள்ளியின் தலையாய நோக்கம்.
- அனைத்து ஊர்களுக்கும் சிறந்த பாதுகாப்புடன் கூடிய வாகன வசதி.
- நவீனமயமாக்கப்பட்ட வகுப்புகள் (Digital Class Rooms).
- நவீன ஆய்வகங்கள்.
- பரந்து விரிந்த விளையாட்டு மைதானம், சிறந்த நூலக வசதி.
- மாணவர்களின் எதிர்காலம் சிறக்க கல்வி கற்றல் முறை குறித்து பெற்றோர் ஆசிரியர் கலந்தாய்வு.
- **கல்வியில் பின்தங்கிய மாணவ, மாணவியருக்குச் சிறப்பு வகுப்புகள்.**
- பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கணினிப் பயிற்சி (Computer Coding & Animation) வகுப்புகள் நடத்தப்பட்டு பல்கலைக்கழகச் சான்றிதழ் வழங்கப்படும்.





For Admission Contact: **93845 66268, 90039 76268**

## EDITORIAL BOARD

**Patrons**

Dr. S.M. Jagatheesan, Chairman.
Mr. K. Subramaniam, Secretary.
Mr. K. Pugalendhi, Treasurer.

**Chief Editor**

Mr. P. Chandrasekaran, Principal.

**Joint Editors**

Mrs. S. Thamilselvi, PGT in Tamil.
Mrs. M. Vidhya Sree, BT in English.

**Members**

Ms. K. Vanitha, PGT in English.
Mrs. P. Jayanthi, BT in English.
Mr. R. Murugesan, BT in Tamil.